**தலைப்பு 233 – அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளா திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

--------------------------------------------------

தலைப்பு 233 – அரசாங்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 12 ஆந் திகதி அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

--------------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள

கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கை நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல். | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரித்திருக்கவில்லை. | 2.4 |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும் | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.6 |
| | | 2. இணக்கமின்மைகள் | 2.7 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியள வானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும், | சொத்துக்கள் முகாமைத்துவ குறைபாடுகள் | 2.3 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்பிக்கப்படுவதாகவும் | வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்காமை | 2.1(ஆ) |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தி யோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்துத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிவிக்கப்படுகின்ற தெனவும் | அரசாங்க உத்தியோகத்த ருக்கான முற்பணக் கணக்கில் நிலுவை கடன்மீதியை அறவீடு செய்தல் | 2.5 |
| 128(1)(ங) | பிணை கட்டுவதற்கு ஆளாகிய உத்தியோகத்தர்கள் நடை முறையிலுள்ள கட்டளை களுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றனர் எனவும், | உத்தியோகத்தர்களிடம் பிணை பெற்றுக்கொள்வதில் குறைபாடுகள் | 2.12 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர் பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர் கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.3 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றல்

**கருமங்கள் நிறைவேற்றுதல் தாமதம்**

(அ) நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் 2017 ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் படி திணைக்களத்தின் பிரதான கருமங்களை நிறைவேற்றல் தொடர்பான முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| பிரிவு | 2017.01.01 திகதி மீதியாக உள்ள வழக்குகளில் எண்ணிக்கை | மீளாய்வாண்டின் போது கிடை த்துள்ள வழக்கு களின் எண்ணிக்கை | மீளாய்வாண்டின் போது அறிவிக் கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2017.12.31 திகதியில் அறிவிக்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| போதைப் பொருள் மற்றும் உளநிலை மாற்று | 1,210 | 10,782 | 10,508 | 1,484 |
| சுடுபடை கலன்கள் ஏவுகனை அறிவியல் | 392 | 380 | 492 | 280 |
| வெடி பொருட்கள் தீ பற்றுதல் | 195 | 422 | 464 | 153 |
| நச்சுத் தன்மை அறிவியல் பிரிவு (நச்சு வகைகள்) | 1,033 | 2,469 | 2,196 | 1,306 |
| நீதிமன்ற போதைப் பொருள் பிரிவு | 1,577 | 1,602 | 1,180 | 1,999 |

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தேகத்திற்கு இடமான பதிவேடு கள் பிரிவு | 301 | 887 | 721 | 467 |
| கணிணி குற்றவியல் | - | 467 | 256 | 211 |
| நீதிமன்ற கலை பல்வேறு பிரிவு | 149 | 453 | 398 | 204 |
| தலைமை அலுவலகம் (மதுபானம்) | 50 | 2,152 | 2,182 | 20 |
| மதுசாரம் மற்றும் புகையிலை | 03 | 2,214 | 2,188 | 29 |
| குருநாகல் (மதுபானம்) | 0 | 2,191 | 2,191 | 0 |
| உணவுச் சட்டத்தின் கீழ் உணவு மாதிரிகள் | 31 | 6,766 | 6,784 | 13 |
| பல்வேறு உணவு வகைகள் | 03 | 1,603 | 1,604 | 02 |
| மொத்தம் | 4,944 | 32,388 | 31,164 | 6,168 |

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இறுதியாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை 6,168 தொகையாக இருந்ததுடன் அவற்றில் 10 வருடங்கள் மிகையான காலம் கடந்திருந்த 21 வழக்குகளும் 5-10 வருடங்கள் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 310 வழக்குகளும் காணப்பட்டன. அதேபோல 1 வருடம் முதல் 5 வருட காலம் கடந்துள்ள 1190 வழக்குகளும் காணப்பட்டதுடன் 1 வருடத்தை விட குறைந்த காலம் உள்ள வழக்குகள் 4647 ஆகும்.

(ஆ) செயலாற்றுகை அறிக்கை 2002 செப்டம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரசநிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ் அறிக்கை 2018 அக்தோபர் 05 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்கவில்லை.

## 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(அ) 2017 வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை 2018 மார்ச் 14 திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருந்த போதிலும்

அவ்வறிக்கை 2016 மார்ச் 31 திகதி 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு சொந்தமான மோட்டார் வாகனம் ஒன்று 2015 ஜுன் 28 திகதி திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் பொருட் பதிவேட்டில் பதியப்பட்டிருந்தது. எனினும் வாகனத்தின் பதிவு செய்தல் சான்றிதழ் பிரகாரம் 2011 நவம்பர் 23 திகதி இலங்கை வங்கியில் இருந்து பெற்றிருந்த கடன் தொகை ஒன்று காணப்பட்டமையால் இந்த வாகனம் சட்டரீதியாக சாட்டுதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

---------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2003 பெப்ரவரி 14 திகதி அரசாங்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தில் தீப்பற்றியதால் ஏற்பட்ட நட்டம் ரூபா 2,229,111 தொகை என ஒதுக்கீட்டு கணக்கில் DGSA–7 படிவத்தில், மேலும் அறவிடப்பட வேண்டிய அல்லது பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு உள்ள நட்டங்கள் தொடர்பாக கூற்றின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இந்த தீபற்றல் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் விசாரணைக்காக நிதிப் பிரமாணம் 104(4) இன் கீழ் காணப்பட்ட நட்டமொன்று தொடர்பாக சரியான அறிக்கையொன்று 2009 திசெம்பர் 15 திகதிக்கு முன்னர் அனுப்பும்படி பணிப்பாளர்/ குற்றப் புலனாய்வு பரிசோதகரின் 2009 திசெம்பர் 03 திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்திருந்ததுடன் அதன் பிரகாரம் செயற்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அதன் பிரகாரம் 15 வருடங்களை விட மிகையான காலம் கழிந்திருந்த போதிலும் இந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு /பதிவழிப்பதற்கு/ கைவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.4 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல்

---

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 135.36 | 134.03 | 1.33 | 1 |
| | மூலதன | 237.19 | 201.54 | 35.65 | 15 |
| | **மொத்தம்** | **372.55** | **335.57** | **36.98** | 10 |
| 2014 | மீண்டுவரும் | 182.81 | 174.37 | 8.44 | 5 |
| | மூலதன | 118.67 | 87.48 | 31.18 | 26 |
| | **மொத்தம்** | **301.48** | **261.85** | **39.62** | 13 |
| 2015 | மீண்டுவரும் | 224.80 | 210.06 | 14.74 | 7 |
| | மூலதன | 290.50 | 162.62 | 127.88 | 44 |
| | **மொத்தம்** | **515.30** | **372.68** | **142.62** | 28 |
| 2016 | மீண்டுவரும் | 248.25 | 244.65 | 3.60 | 1 |
| | மூலதன | 412.25 | 365.69 | 46.55 | 11 |
| | **மொத்தம்** | **660.50** | **610.34** | **50.15** | 8 |
| 2017 | மீண்டுவரும் | 267.22 | 250.81 | 16.41 | 6 |
| | மூலதன | 108.26 | 103.08 | 5.17 | 5 |
| | **மொத்தம்** | **375.48** | **353.89** | **21.58** | 6 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிப் பிரமாணம் 94(2) இன் பிரகாரம் வருடாந்தம் மீழெலும் சேவைகள் அல்லது வழங்கள்களின் கீழ் அடங்காத மீண்டுவரும் செலவு விடயம் ஒன்றில் மற்றும் இரண்டு மூலதன செலவு விடயங்களில் ஏற்பாடுகளை விஞ்சி ரூபா 7,153,867 இற்கான பொறுப்புகளுக்கு கடப்பட்டிருந்தது.

## 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 23301 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 8.00 | 7.33 | 5.50 | 5.89 | 35.00 | 19.54 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யாமை

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இனக்கக் கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட 2007 ஆண்டின் போது வேலை இடை நிறுத்தப்பட்ட பெண் உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 18,754 இற்கான இடர் கடன் மீதி 10 வருடங்களை விட கூடிய காலம் கடந்திருந்த போதிலும் அறவீடு செய்திருக்கவில்லை.

## 2.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

சேதங்கள் தொடர்பாக பதிவேடு நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

2004 ஜனவரி 26 ஆம் திகதி தேசிய நூலக மற்றும் ஆவணங்கள் சேவை சபையின் அறிவுரை சுற்றறிக்கை இலக்கம் 2004/பி.ச/01 சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது வருடாந்த இருப்புக் கணிப்பீடு கணக்காய்வுத்

திகதியாகிய 2017 திசெம்பர் 14 திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2014 ஆண்டிற்கான நூலக புத்தக கணிப்பீட்டு அறிக்கை 2016 மே 23 திகதி சமர்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் சேதமடைந்து அகற்றப்பட வேண்டிய 831 புத்தகங்கள் மற்றும் திருத்த வேலை மேற்கொள்ளக் கூடிய 37 புத்தகங்களை இனங்கண்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியாகிய 2017 திசெம்பர் 14 திகதி வரை அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

**2.8 உள்ளக கணக்காய்வு**

-----------------------------------

முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அனுப்பட்ட DMS/1103/VII மற்றும் 2016 செப்டம்பர் 01 திகதி கடிதத்தின் பிரகாரம் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு அலகு ஒன்று நிறுவுவதற்காக இலங்கை கணக்காய்வாளர் சேவையின் III/II தரத்தில் உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதிவரை அந்த பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

**2.9 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

------------------------------------------------------------------------------

திணைக்களத்திற்காக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டிருந்தது 2016 ஜனவாரி 28 திகதி DMA/2009(1)(i) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டு ஒன்றில் குறைந்த அளவு ஒரு கூட்டம் என்ற வகையில் 04 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக முதல் காலாண்டிற்காக 2017 செப்டம்பர் 13 திகதியும் இரண்டாம் காலாண்டுக்காக 2017 நவம்பர் 28 திகதியும் ஆக 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**2.10 மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------------------

**2.10.1 இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 130.84 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 101 | 82 | 19 |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 01 | 09 |
| (iii) | இரண்டாம் நிலை | 118 | 80 | 38 |
| (iv) | ஆரம்ப நிலை | 78 | 68 | 10 |
| | மொத்தம் | 307 | 231 | 76 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பின்வரும் பதவிகளில் 28 வெற்றிடங்கள் காணப்படல் நிறுவனத்தில் செயலாற்றலை நேரடியாக தாக்கியிருந்தது.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அரச மேலதிக இரசாயன பகுப்பாய்வாளர் (விஷேட தரம்) | 02 | - | 02 |
| அரச பிரதி இரசாயன பகுப்பாய்வாளர் | 05 | 02 | 03 |
| பிரதான உதவி இரசாயன பகுப்பாய்வாளர் | 76 | 65 | 11 |
| தர பாதுகாப்பு விஞ்ஞானி | 01 | - | 01 |
| ஆய்வு கூட உதவி சேவை (மேல் வகுப்பு) | 05 | 01 | 04 |
| ஆய்வுகூட துணை உதவியாளர் | 12 | 05 | 07 |
| | 101 | 73 | 28 |

இந்த திணைக்களம் 13 பிரிவுகளின் கீழ் விஞ்ஞான ரீதியான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவற்றினல் மூலம் வருடாந்தம் விதப்புரைகள் மற்றும் அறிக்கைகள் 30000 இற்கு அண்மித்த தொகை பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கைகளை தட்டச்சு இடுவதற்காகவும் அறிக்கைகளை உயர்ந்த தரத்தில் சமர்ப்பிப்பதனை 09 தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பதவிகளில் காணப்படும் 19 வெற்றிடங்கள் நேரடியாக பாதித்துள்ளது.

**2.11 பதவியணி பயிற்சி வழங்கல்**

---------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திணைக்களத்தில் உள்ளவாறான பதவியணி 231 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் உள்நாட்டில் பயிற்சி பெற்ற பதவியணி 46 தொகையும், வெளிநாட்டு பயிற்சி பெற்ற பதவியணிகள் 05 உப உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி பெற்ற பதவியணியும் 04 காணப்பட்டது. அதன் பிரகாரம் திணைக்களத்தின் உள்ளவாறான பதவியணி 231 பேரில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி பெற்றிருந்த சுமார் 51 பதவியணியினர் காணப்பட்டதுடன் 180 உத்தியோகத்தர் எந்தவித பயிற்சியும் பெற்றிருக்கவில்லை.

**2.12 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்**

--------------------------------------------------------------------------

நிதிப் பிரமாணம் 880 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் அரசாங்க பணம், வருமான முத்திரை அல்லது பொருட்கள் ஏற்றுக் கொள்ளும் அல்லது பொறுப்பாக இருத்தல், அவ்வாறின்றேல் அரசாங்க பணம் வினியோகித்தல் அல்லது முத்திரை அல்லது பொருட்கள் வழங்குதல் தொடர்பாக நிருவாக ரீதியாக பொறுப்புச் சொல்ல வேண்டிய அல்லது அதிகாரம் அளிக்கப்பட்டதன் கீழ் அந்த விடயங்கள் சாட்டப்பட்டுள்ள அல்லது உத்தியோகத்தர்களும் அரச கணக்கிற்கு உரிய உறுதிச் சீட்டுக்களை சான்றுபடுத்தும் காசோலைகள் கையொப்பமிடும் ஆட்களும் தமது கடமை அலுவல்களை நம்பிக்கையுடன் நிறைவேற்றுவதாக 612 ஆம் அதிகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளை சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டுமெனினும், பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பதின்மூன்று பேர் (13) தொடர்பாக திணைக்களத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.